உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

# யுகங்களின் தெய்வீக திட்டங்கள்

## இரண்டாம் மற்றும் மூன்றாம் உலகம்

### பாடம் - 5




## வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் : # 5

## யுகங்களின் தெய்வீக திட்டங்கள்

### இரண்டாம் மற்றும் மூன்றாம் உலகம்

**உங்கள் கவனத்திற்கு : ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

இன்று நாம் யுகங்களின் தெய்வீக திட்டத்தில் இரண்டாம் மற்றும் மூன்றாம் உலகத்தைப் பற்றி தியானிப்போம்.

இந்த யுகங்களின் வரைப்படத்தில் **“B”** என்ற எழுத்து இரண்டாம் உலகத்தின் காலகட்டத்தைக் குறிக்கிறது.



இந்த **“இரண்டாம் உலகம்”** சரியாக ஜலப்பிரளயத்தின் முதலாம் நாளில் ஆரம்பித்தது. (ஆதியாகமம் 7:11)



மேலும், அதே நாளில் **முதல் உலகம்** முடிவடைந்து **இரண்டாம் உலகம்** தொடங்கியது.

மழையினால் வந்த ஜலப்பிரளயம் 40 பகல் 40 இரவு நீடித்திருந்தாலும், பூமியின் மேல் இருந்த தண்ணீர் வற்றுவதற்கு ஒரு வருடமும் பத்து நாளும் ஆயிற்று.



நோவாவின் குடும்பத்தினர் ஒரு வருடம், பத்து நாட்களாக அந்த பேழையில் இருந்தார்கள். (ஆதியாகமம்; 7:11, 8-14).

[இந்த ஒரு வருடம் 10 நாட்கள் கணக்கீடு அட்டவணை கடைசிப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளதைக் காண்க.]

இரண்டாம் உலகத்தில் மூன்று பிரிவுகள் உள்ளதை நாம் கவனிக்க வேண்டும். இதை நாம் “**யுகங்கள்**” என்று அழைக்கிறோம்.

1. இரண்டாம் உலகத்தின் முதல் பாகத்தை “முற்பிதாக்கள் யுகம்” என்று அழைக்கிறோம். தேவன் இந்த யுகத்தில் தனி நபர்களோடு அல்லது விசுவாசிகளோடு தொடர்பு கொண்டிருந்தார்.

2. இரண்டாம் பாகத்தை “யூத யுகம்” என்று அழைக்கிறோம். இந்த யுகத்தில் தேவன் இஸ்ரயேல் என்று அழைக்கப்பட்ட யாக்கோபின் 12 குமாரரோடு தொடர்பு கொண்டிருந்தார்.

3.

மூன்றாவது பாகத்தை “சுவிசேஷ யுகம்” என்று அழைக்கிறோம். இந்த யுகத்தில் தேவன் கிறிஸ்துவை தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களிடம் தொடர்பு கொண்டிருக்கிறார்.

இப்பொழுது நாம் இப்பாடத்தை விவரமாகப் பார்ப்போம்.

ஜலப்பிரளயத்தின் முடிவில் பூமியின் மேல் இருந்த தண்ணீர் முற்றிலுமாக வடிந்த பின்பு நோவாவும், அவருடைய குடும்பத்தினர் ஏழு பேரும் முதலாம் உலகத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். (2 பேதுரு 2:5)



**ஆகவே இந்த எட்டு பேரைக் கொண்டு இரண்டாம் உலகம் ஆரம்பிக்கப்பட்டது.**

**ஆதியாகமம் 9:18,19**

**"பேழையிலிருந்து புறப்பட்ட நோவாவின் குமாரர், சேம், காம், யாபேத் என்பவர்களே.... இம்மூவரும் நோவாவின் குமாரர், இவர்களாலே பூமியெங்கும் ஜனங்கள் பரம்பினார்கள்."**

இன்றைக்கு இருக்கக்கூடிய மக்கள் அனைவரும் இவர்கள் மூலமாக பலுகிப் பெருகி இருக்கிறார்கள். அடுத்ததாக நோவாவின் பிள்ளைகளின் பிறப்பைக் குறித்து பார்க்கும்போது,

**ஆதியாகமம் 5:32, 9:18**

**"நோவா ஐந்நூறு வயதானபோது, சேம் காம் யாப்பேத் என்பவர்களைப் பெற்றான்."**

**"பேழையிலிருந்து புறப்பட்ட நோவாவின் குமாரர், சேம் காம் யாப்பேத் என்பவர்களே. காம் கானானுக்குத் தகப்பன்."**

**இது தான் நோவாவின் பிள்ளைகளின் வரிசையா?**

கீழுள்ள வசனங்களை படித்து அறியலாம்.

**ஆதியாகமம் 10:21**

**"சேமுக்கும் பிள்ளைகள் பிறந்தார்கள்; அவன் ஏபேருடைய சந்ததியார் எல்லாருக்கும் தகப்பனும், மூத்தவனாகிய யாப்பேத்துக்குத் தம்பியுமாய் இருந்தான்."**

**ஆதியாகமம் 9:24**

**"நோவா திராட்சரசத்தின் வெறி தெளிந்து விழித்தபோது, தன் இளைய குமாரன் தனக்குச் செய்ததை அறிந்து:.."**



நாம் மேற்கூறிய வசனங்களைப் பார்க்கும் பொழுது, **யாபேபேத் மூத்தவன்** என்றும், **காம் இளையவன்** என்றும் தெளிவாக அறிந்து கொள்ளலாம். இதன் மூலம், வசனங்களை வாசிக்கும் பொழுது மிக கவனமாக வாசிக்க வேண்டும் என்று அறிகிறோம்.

**[ஆதியாகமம் 5:32-ம் வசனத்தில் பிள்ளைகளின் வரிசை மாற்றப்பட்டுள்ளது.]**

இப்பொழுது நாம் நோவாவின் சந்ததியிலிருந்து ஒவ்வொரு இனத்தாரும் தோன்றின வரலாற்றைப் பார்ப்போம். **(ஆதியாகமம் 9:19)**

# யாப்பேத்



**ஆதியாகமம் 9:27**

**"யாப்பேத்தை தேவன் விருத்தியாக்குவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான் என்றான்."**

இந்த தீர்க்கதரிசன வசனம் ஒரு ஆளுகைக்குரிய சந்ததியைப் பற்றி குறிப்பிடுகிறது. உலகில் இவர்கள் யார் என்று நாம் கூர்ந்து பார்க்கும் போது, இவர்கள் இன்றைக்கு எல்லாவற்றிலும் மேம்பட்டவர்களாக இருக்கக் கூடிய வெள்ளை இன மக்களைக் குறிக்கிறது. இவர்கள் ஐரோப்பாவையும் பின்பு வட, தென் அமெரிக்காவையும் தங்கள் இருப்பிடமாக்கிக் கொண்டவர்கள்.

இவர்கள் அனைவருக்கும் யாப்பேத் தந்தையாவார். இவர்கள் வழியாக அநேக இராஜாக்கள், தலைவர்கள், தோன்றி இருக்கிறார்கள்.

உலகம் முழுவதும் ஆட்சிபுரிந்த ரோம சாம்ராஜ்யம், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இதற்கு சில உதாரணங்கள் ஆகும். இன்னும் அரசியல், வணிகம் அனைத்திலும் சிறப்பாக செயல்படுகிறவர்கள் இவர்களே.

# சேம்



**ஆதியாகமம் 9:26**

**"சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்."**

இங்கு “சேமுடைய தேவன்” என்று சொல்லப்படுகிற தேவன், ஆதாமுடன் ஏதேன் தோட்டத்தில் பேசினவரும், பல நூற்றாண்டுகளுக்குப்

பின்பு இஸ்ரயேலில் பெத்லகேம் என்னும் ஊரில் “இயேசுவாக” பிறந்த நம் இரட்சகர் ஆவார்.

இவர்கள் அனைவரும் ஆசியா கண்டத்தை சேர்ந்தவர்கள். சேமுடைய சந்ததியை சேர்ந்த இவர்கள் தற்போதுள்ள சீனா, ஜப்பான், கொரியா, தாய்லாந்து, மலேசியா, பர்மா, இந்தோனேஷியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் குடியிருக்கிறார்கள்.

இவர்கள் இயற்கையாகவே அமைதியும், தேவ பக்தியுமுள்ள ஜனங்களாக இருந்து, தேவனைத் தேடக்கூடியவர்களாக இருக்கிறார்கள். உலகின் அனைத்து மதங்களும் இந்த சேம் வம்சத்திலிருந்து தோன்றியுள்ளதை நாம் உணரலாம்.

**உதாரணமாக,** யூத மதம், புத்த மதம், இந்து மதம், ஜைன மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மதம் முதலியன....

இந்தியா ஆசியா கண்டத்தில் அமைந்திருந்தாலும், இவர்கள் முழுமையான சேம் வம்சத்தினர் அல்ல, என்பதை பின்வரும் பகுதியில் பார்க்கலாம்.

அடுத்து நோவாவின் இளைய மகனாகிய காமைப் பற்றி ஒரு விநோதமான காரியத்தைப் பார்க்கலாம்.

# காம்

**ஆதியாகமம் 9:20-22**

**"நோவா பயிரிடுகிறவனாகி, திராட்சத்தோட்டத்தை நாட்டினான். அவன் திராட்சரசத்தைக் குடித்து, வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான். அப்பொழுது கானானுக்குத் தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு, வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்கும் அறிவித்தான்."**

**நோவாவுக்கு என்ன நடந்தது?**

**உண்மையில் அவர் குடித்து வெறித்திருந்தாரா?**



நோவா “திராட்சை பயிரிடுபவராக” இருந்தார். அவர் திராட்சத் தோட்டங்களை நாட்டினார்.

நோவா முதல் உலகத்தில் என்ன செய்தாரோ, அதே காரியத்தை இரண்டாம் உலகத்திலும் செய்தார். அவர் திராட்சத்தோட்டத்தை நாட்டி, ரசத்தை பிழிந்து, தனக்காக பெரிய ஜாடிகளில் சேர்த்து வைத்துப் பயன்படுத்தி வந்தார்.

இது **முதலாம் உலகில்** அவருடைய வழக்கமாயிருந்தது. ஆனால், இரண்டாம் உலகில் ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்திருந்தது. ஜலப்பிரளயத்திற்கு பிறகு சீதோஷ்ண நிலை முற்றிலும் மாறுபட்டிருந்தது.

**(ஆதியாகமம்; 7:11) “....வானத்தின் மதகுகளும் திறவுண்டன.”**

பூமியைச் சுற்றி இருந்த **“நீர்ப் படலம்”** உடைந்து பூமியின் மேல் ஜலப் பிரளயமாக வந்தது. மிகுந்த குளிர்ச்சியாக இருந்த முதலாம் உலகத்தின் சீதோஷ்ண நிலை மாறி, அதிகமான குளிரும், வெப்பமும் பூமியை தாக்கியது. சூரியக் கதிர்கள் பூமியின் மேல் நேரடியாக விழுந்தது.



**அதன் மூலம் நோவா சேமித்து வைத்திருந்த திராட்சரசம் புளித்து.... மதுவாக மாறிவிட்டது.**

**இந்த மாற்றங்களை அறிந்திராத நோவா போதைக்கு உள்ளானார்.**

மது, மனித மூளையில் உள்ள சிறுமூளை என்ற பகுதியை பாதித்து சுயநினைவை இழக்கச் செய்யும். இதில் அகப்பட்ட நோவா அவருடைய வஸ்திரங்களை மாற்றும் பொழுது தன் சுயநினைவை இழந்து வஸ்திரம் இல்லாதவராக திடீரென்று நித்திரை அடைந்திருக்க வேண்டும்.

## பின்பு நடந்தது என்ன?

### ஆதியாகமம் 9:22

**"அப்பொழுது கானானுக்குத் தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு, வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்கும் அறிவித்தான்."**



அவனுடைய சகோதரர்கள் இருவரும் வஸ்திரத்தை எடுத்துத் தங்கள் இருவருடைய தோளின்மேலும் போட்டுக்கொண்டு, “பின்னிட்டு” வந்து, தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள். பின் நோவா வெறி தெளிந்து எழுந்தபோது நடந்ததை வாசிக்கலாம்.

### ஆதியாகமம் 9:24,25

**"நோவா திராட்சரசத்தின் வெறி தெளிந்து விழித்தபோது, தன் இளைய குமாரன் தனக்குச் செய்ததை அறிந்து: கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்றான்."**

**இங்கு, “காம்” தவறு செய்திருக்கும்போது நோவா கானானை சபிக்க காரணம் என்ன?**



## இது அநீதியாக தோன்றவில்லையா?

## இன்னும் பிறக்காத கானானை சபிப்பது எவ்விதத்தில் நியாயம்?

இதை புரிந்துகொள்ள அங்கு உண்மையில் நடந்த காரியம் என்ன என்று ஆராய்ந்து பார்ப்போம். நோவா அநியாயமாக தண்டனையை கொடுக்க அவர் அநீதியுள்ளவரல்ல. அவர் மிகுந்த கோபம் அடைந்து அவருடைய சந்ததியை சபிப்பதற்கான காரணத்தை பார்ப்போம். காம் முதலாம் உலகத்தில் இருந்து வந்தவர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**ஆதியாகமம் 6:5**

**"மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,.."**

இது முதலாம் உலகத்தின் நிலைமையாக இருந்தது. காம் அந்த உலகத்தின் அனைத்து காரியங்களையும் கண்டு வாழ்ந்திருக்க வேண்டும்.

### முதல் உலகத்தில் நடந்த “பொல்லாத காரியங்கள்” என்ன?

### ரோமர் 1:27

**"அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்."**

இங்கு நிகழ்ந்த பெரிதான தீமை “தேவன் அங்கீகரியாத உறவு” ஆகும். இந்தப் பாவம் சோதோம் கொமோரா மக்களிடமும் காணப்பட்டது. **(ஆதியாகமம்; 19:4,5)**

### ஆதியாகமம் 9:24

**“.....தன் இளைய குமாரன் தனக்குச் செய்ததை அறிந்து....”**

### ஆதியாகமம் 9:22

**“....காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு...”**

## ஆதியாகமம் 10:19

**“கானானியரின் எல்லை, சீதோன்முதல் கேரார் வழியாய்க் காசாமட்டுக்கும், அது முதல் சோதோம், கொமோரா, அத்மா, செபோயிம் வழியாய் லாசாமட்டுக்கும் இருந்தது.”**



ஆகவே, காம் அவருடைய தகப்பனோடு தவறான உறவிற்கு முயற்சித்ததினால் அவர் காமுடைய சந்ததி கானான் முதல் அனைவரையும் சபித்து விட்டார்.



இந்த சபிக்கப்பட்ட இனம் இன்று இருக்கக்கூடிய நீக்ரோ மக்கள் ஆவார்கள். இவர்கள் ஆப்ரிக்காவைச் சேர்ந்தவர்கள். நோவா கொடுத்த சாபத்தின் சகல பாதிப்புகளையும் இவர்களிடத்தில் காணலாம்.

இவர்களுடைய தலை முடி நெருப்பினால் சுட்டது போல சுருண்டு இருக்கும். இவர்களுடைய நிறம் நெருப்பில் சுட்டது போல் கருப்பாக இருக்கும். இவர்களுடைய மூக்கு பெரிதாகவும், சரியான வடிவம் இல்லாமலும் இருக்கும்.

கானானுடைய சந்ததி இன்றைக்கு இருக்கக்கூடிய நீக்ரோ மக்களென்று நாம் இன்னும் சில ஆதார வசனங்களைக் கொண்டு புரிந்து கொள்ளலாம்.

## ஆதியாகமம் 9:25

**“....தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான்...”**

ஆம், நீக்ரோ இன மக்களுடைய வரலாற்றில் 1870 ம் வருடம் வரைக்கும் சகல நாட்டினராலும் அடிமைகளாக விற்கப்பட்டு வாங்கப்பட்டார்கள். இவர்கள் “டேவிட் லிவிங்ஸ்டன்” என்பவருடைய முயற்சியினால் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றார்கள்.



மேலும், இங்கு, காம் சந்ததியை **“அடிமைகளுக்கு அடிமை”** என்று வாசிக்கிறோம்.

அப்படியானால், சேம் மற்றும் யாப்பேத் சந்ததியும் கூட அடிமைகளாக இருந்தவர்கள் என்று பொருள்படுவதை கவனிக்கவேண்டும்.

**இவர்கள் யாருக்கு அடிமைகளாக இருந்தார்கள்?**

இதை குறித்து கீழுள்ள வசனத்தில் வாசிப்போம்.

**ரோமர் 6:16**

**"....எதற்கு கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?"**

இப்படியாக, முழு மனுக்குலமும் பாவத்திற்கு அடிமைகளாக இருக்கிறார்கள் ! ஆகவே, காம் வம்சத்தினர் இந்த அடிமைகளுக்கு அடிமைகளாக இருக்கிறார்கள் !

இப்பொழுது நாம் இந்தியர்களின் நிலை பற்றி பார்ப்போம்.

இவர்கள் எந்த வம்சத்தை சேர்ந்தவர்கள்? முழுமையாக சேம் வம்சத்தை சேர்ந்தவர்களா? இதற்கான பதில் அவர்களுடைய வரலாற்றில் காணப்படுகிறது.

கிழக்கு ஐரோப்பாவிலிருந்து வந்த ஆரியர்கள் வட இந்தியாவில் குடியேறினார்கள். இவர்கள் யாப்பேத்தின் சந்ததி ஆவார்கள்.

ஆப்பிரிக்காவை சேர்ந்த ஆதி திராவிடர்கள் தென் இந்தியாவில் குடியேறினார்கள். ...இவர்கள் காமின் சந்ததி ஆவார்கள்.

அதுபோல், சேம் சந்ததி நாகாலாந்து, மிசோராம், அருணாச்சல் பிரதேசம் ஆகிய இடங்களில் இருந்தார்கள்.

**ஆக இந்த நோவாவின் மூன்று குமாரருடைய சந்ததி இந்தியாவில் கலப்பு இனங்களாக காணப்படுகின்றனர்.**

இன்றும் நம் நாட்டில் நல்ல நிறத்தோடு சுருட்டை முடியும், பெரிய மூக்கும், அதே சமயம் கருப்பான நிறத்தில் அழகான மூக்கும், முக இலட்சணங்கள் இருக்கும், இப்படியாக எல்லாம் கலந்து விட்டது. இந்தியர்களுடைய மனநிலையிலும் கூட கலப்பு இருப்பதை உணரலாம்.

எப்படியெனில், இவர்கள் ஆளுகைக்கும் முன்வருவதில்லை, அடிமையாவதற்கும் தயாரில்லை, முழுமையாக தேவனுக்கும் தங்களை அற்பணிக்க மனதில்லை.

உண்மையில், இவர்கள் உலகில் முக்கிய இடத்தை வகிக்கிறார்கள். நம்முடைய வேதாகமத்தில் இந்திய தேசத்தைப் பற்றி ஏசாயாவில் குறிப்பிடப்பட்டுள்ளதை கவனிக்க வேண்டும்.

**ஏசாயா 2:8**

**"அவர்கள் தேசம் விக்கிரகங்களாலும் நிறைந்திருக்கிறது; தங்கள் கைகளின் கிரியையையும் தங்கள் விரல்கள் உண்டுபண்ணினதையும் பணிந்து கொள்ளுகிறார்கள்."**

இந்தியாவைத் தவிர வேறெந்த தேசத்திலும் இவ்வளவு விக்கிரகங்கள் இல்லை.

நோவாவின் மூன்று பிள்ளைகள் சேம், காம், யாப்பேத்தின் மூலம் இவ்வுலகில் மக்கள் பலுகிப் பெருகினார்கள் என்று பார்த்தோம்.

இப்பொழுது இரண்டாம் உலகத்தில் இருக்கக்கூடிய மூன்று "யுகங்களைப்" பற்றி பார்ப்போம்.

## முற்பிதாக்களின் யுகம்

நோவா நாட்களில் ஜலப்பிரளயம் துவங்கி யாக்கோபின் மரணம் வரைக்கும் உள்ள பகுதி முற்பிதாக்களின் யுகம் என்று அழைக்கப்படுகிறது, இக்காலத்தில் தேவன் குறிப்பிட்ட மனிதர்களிடம் மட்டுமே தொடர்புகொண்டு, அவர்களோடு உடன்படிக்கை செய்திருந்தார்.

இவர்களை நாம் முற்பிதாக்கள் என்று அழைக்கிறோம். இவ்வரிசையில் முதலாவது வந்தவர் நோவா. பின்பு ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களே.



தேவன் முதல் உடன்படிக்கையை நோவாவோடு செய்தார். **(ஆதியாகமம் 9:9-11)**

பல வருடங்களுக்குப் பின்பு, ஆபிராமோடு தொடர்புகொண்டார். அவர் பெயர் ஆபிரகாம் என்று மாற்றப்பட்டது.

விசுவாசத்தின் நிமித்தம் அவர் தேவனுக்கு கீழ்ப்படிந்து, அவருடைய ஒரே குமாரன் ஈசாக்கை பலி செலுத்த ஒப்புக் கொடுத்தபடியால் அவர் "விசுவாசத்தின் தந்தை" என்று அழைக்கப்பட்டார்.

**(ஆதியாகமம் 22:1-3)**

இவர் நோவாவிலிருந்து பத்தாவது தலைமுறையாகவும், ஆதாமிலிருந்து இருபதாவது தலைமுறையாகவும் இருந்தவர்.

**தேவன் ஆபிரகாமை அழைத்தபொழுது அவர் எப்படிப்பட்டவராக இருந்தார்?**
**அவர் உண்மையான தேவனைத் தொழுது கொண்டிருந்தாரா?**

இதற்கான பதிலை கீழுள்ள வசனத்தில் வாசிப்போம்.

**யோசுவா 24:2**

**".....பூர்வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்கும் தகப்பனான தேராகு என்பவன் நதிக்கு அப்புறத்திலே குடியிருந்தபோது அவர்கள் வேறே தேவர்களைச் சேவித்தார்கள்."**

**ஆபிரகாம் முற்காலத்தில் விக்கிரகாராதனைக்காரராக இருந்தார் !!**

ஆகவே, தேவன் அந்த தேசத்தையும், மக்களையும் விட்டு அவர் காண்பிக்கும் கானான் தேசத்திற்கு போகும்படி சொன்னார். இந்தக் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்த ஆபிரகாமுக்கு தேவன் அநேக ஆசீர்வாதங்கள் அடங்கிய வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார்.



**ஆதியாகமம் 12:1-2**

**"கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்...."**

ஆபிரகாமைக் குறித்து நாம் பின்வரும் பாடங்களில் பார்ப்போம்.

தேவன் ஆபிரகாமுக்கு பின்பு அவருடைய குமாரன் ஈசாக்கோடும் பின்பு ஈசாக்கின் குமாரன் யாக்கோபுடனும் தொடர்பு கொண்டார். யாக்கோபு 12 கோத்திரங்களான இஸ்ரயேல் மக்களுக்கு தகப்பனானார்.

**இந்த நான்கு முற்பிதாக்கள் பற்றி நம்முடைய வேதாகமத்தில் உள்ள முதலாம் புத்தகமான ஆதியாகமத்தில் அநேக காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.**

## யூத யுகம்

முற்பிதாக்களில் கடைசியானவர் யாக்கோபு. இவர் மரணத்திற்கு பின் துவங்கும் காலப்பகுதியை யூத யுகம் என்று அழைக்கிறோம். இதுவரை தனி நபர்களோடு தொடர்புகொண்டிருந்த தேவன் இப்பொழுது யாக்கோபின் 12 குமாரர்கள், அதாவது “இஸ்ரயேல்” ஜனங்களோடு தொடர்பு கொண்டார்.

**ஆமோஸ் 3:2**

**"பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்;..."**

தேவன் இஸ்ரயேல் ஜனங்களை “தன்னுடைய சொந்த ஜனங்களாக” தெரிந்துகொண்டார். **(யாத்திராகமம்; 3:10)**

இஸ்ரயேல் ஜனங்களோடு தேவன் தொடர்புகொண்ட காலப்பகுதி 1800 வருடங்களுக்கு மேல் நீடித்தது. இதில் அநேக அனுபவங்களை அந்த ஜனங்கள் பெற்றுக்கொண்டார்கள்.



இந்த யுகத்தில், அதாவது, இஸ்ரயேல் ஜனங்கள் எகிப்தில் “அடிமைகளாக” இருந்த பொழுது பார்வோனிடத்திலிருந்து, இவர்களை தேவன் வல்லமையாக மோசே மூலமாக விடுவித்தார்.

இந்த காரியங்கள் வேதாகமத்தின் இரண்டாம் புத்தகமான யாத்திராகமத்தில் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது.

இதற்கு பின்பு இஸ்ரயேல் ஜனங்களை வாக்குத்தத்த தேசமாகிய கானானுக்கு அழைத்துச் சென்றார். தொடர்சியாக அநேக தீர்க்கதரிசிகளைக் கொண்டு ஜனங்களுக்கு சட்ட திட்டங்களை கொடுத்து, வழிநடத்தி வந்தார். இந்த தீர்க்கதரிசிகள் தேவனுடைய வார்த்தைகளை போதித்து, அதை புத்தகங்களாக எழுதியும் வைத்திருக்கிறார்கள்.



இது ஏசாயாவின் தீர்க்கதரிசன புத்தகம் முதல் மல்கியா புத்தகம் வரைக்கும் எழுதப்பட்டிருக்கிறது.

**இந்த யூத யுகத்தில், தேவன் மோசே மூலமாக தெய்வீகப் பிரமாணங்களை கொடுத்தார். (யாத்திராகம் 24:12)**

இந்த நியாயப்பிரமாணத்தில் பத்து கட்டளைகளும், அதற்கும் மேலாக 3600 சட்டங்களும் அடங்கும். அதோடு, அன்றாட வாழ்க்கைக்கு தேவையான (குளியல், கழிவு முறை முதற்கொண்ட) சட்டங்கள் கொடுக்கப்பட்டது. (உபாகமம் 23:12,13)

இந்தக் கற்பனைகள் அனைத்தும் லேவியராகமத்திலும், உபாகமத்திலும் விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. கடைசியாக **"நியாயப்பிரமாணத்தின் கீழ்"** இஸ்ரயேலில் தேவனுடைய குமாரன் **இயேசு கிறிஸ்து பிறந்தார்.**

**கலாத்தியர் 4:4**

**"நாம் புத்திர சுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்க,..."**

**இஸ்ரயேல் மக்களுக்கு எவ்வளவு பெரிய அளவற்ற ஆசீர்வாதம்!**

ஆனால், அவர்கள் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொள்ளாமல் அவரை நிராகரித்தார்கள். ஆகவே, இயேசுவின் கீழ்கண்ட வார்த்தைகளுடன் யூத யுகம் முடிவடைந்தது.

**மத்தேயு 23:38**

**"இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்."**



# சுவிசேஷ யுகம்

இரண்டாவது உலகத்தில் மூன்றாவதாகவும், கடைசியாகவும் உள்ள பகுதியைப் பற்றி பார்க்கலாம்.

இப்பகுதி "சுவிசேஷ யுகம்" அல்லது "கிறிஸ்தவர்கள் யுகம்" என்று அழைக்கப்படுகிறது. இந்த யுகத்தைப் பற்றி நாம் கீழுள்ள வசனத்தில் வாசிப்போம்.

## ரோமர் 16:25,26

**"ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்து, இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே அநாதி தேவனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டதும், சகலஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான, இயேசுகிறிஸ்துவைப்பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷத்தின்படியே உங்களை ஸ்திரப்படுத்த வல்லவரும்,.."**

இந்த யுகத்தில் **"இயேசுவைக் குறித்து பிரசங்கிக்கப்படுகிறது"**. மேலும், எல்லா மறை பொருள்களும், இரகசியங்களும் வெளியரங்கமாக்கப்படுகிறது.

## இந்த இரகசியம் என்ன?

இதைக் குறித்து நாம் கீழுள்ள வசனத்தில் வாசிக்கலாம்.

## எபேசியர் 3:5,6,3

**"அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக்குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்ளலாம்; இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை."**

**"அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்."**

கிறிஸ்து என்னும் ஒரே சரீரத்திற்கு அங்கங்களாக யூதர்களும், புறஜாதியாரும் அழைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதே இந்த மாபெரும் இரகசியம் ஆகும். **(எபேசியர் 4:4)**

கிறிஸ்துவின் சபை என்ன என்பதை நாம் வரக்கூடிய பாடங்களில் மூன்று பாகங்களில் பார்க்கலாம். (மத்தேயு 16:18)

கடைசியாக, இரண்டாம் உலகம் இந்த மூன்றாவது யுகத்தோடு நிறைவு பெறுகிறது. நாம் இந்த உலகத்தின் முடிவு பற்றி வாசிக்கும் பொழுது,

**2 பேதுரு 3:7,10**

**"இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது."**

**"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்."**



மேற்கண்ட வசனத்தில், அப்போஸ்தலனாகிய பேதுரு, இரண்டாம் உலகம் "அக்கினியால்" அழிக்கப்படும் என்பதை எழுதியிருக்கிறார்.

**அப்படியானால், முதலாம் உலகம் "ஜலத்தினால்" அழிந்ததுபோல இந்த இரண்டாம் உலகம் "அக்கினியினால்" அழிக்கப்படுமா?**

**முதலாம் உலகின் "ஜலப்பிரளயம்" போல இரண்டாம் உலகின் "அக்கினி"யும் சொல்லர்த்தமானதா?**

இந்த வசனத்தின் ஆவிக்குரிய அர்த்தத்தை ஆராய்ந்து பார்ப்போம்.

**“....அதில் உள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.”**



## இங்கு “கிரியைகள்” என்பதன் பொருள் என்ன?

பூமியில் உள்ள பொய், திருட்டு, ஏமாற்றுவது, சுயநலம் ஆகிய இவைகளே பூமியில் உள்ள கிரியைகள் என்று நமக்குத் தெரியும்.

## இப்படிப்பட்ட “வேலைகள்” சொல் அர்த்தமான அக்கினியால் எப்படி எரிக்கப்படும்?

நிச்சயமாக இவைகளை அக்கினியால் அழிக்க முடியாது. ஆகவே, அக்கினி என்பது அடையாள மொழியில் எதைக்குறிக்கிறது என்று நிதானிக்க வேண்டும். இதைக் குறித்து கீழுள்ள வசனத்தில் வாசிப்போம்.

### செப்பனியா 3:8

**"....என் சினமாகிய உக்கிரகோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்."**

அதாவது, பூமியில் உள்ள தீமையான அமைப்புகளுக்கு எதிரான தேவனுடைய நீதியுள்ள கோபம் மற்றும் நியாயத்தீர்ப்பை இந்த அக்கினி அடையாளமாகக் காட்டுகிறது.



மேலும், நியாயத்தீர்ப்பு நடக்கும்போது பூமியின் குடிகள் நீதியைக் கற்றுக் கொள்ளுவார்கள் என்று கீழுள்ள வசனத்தில் வாசித்து அறியலாம்.



### ஏசாயா 26:9

**"என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்;**

**உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்."**

ஆம், இப்படிப்பட்ட அழிவைப்பற்றித் தான் பேதுரு குறிப்பிட்டு இருக்கிறார்.



**"...பூதங்கள் வெந்து உருகிப் போகும்..." 2 பேதுரு 3:10**

இங்கு பூதங்கள் என்பது பூமியில் இருக்கும் அமைப்புகளைக் குறிக்கும் என்று முதல் பாகத்தில் பார்த்தோம்.

**அரசியல், பொருளாதாரம், மதம், சமுதாயம்**
**ஆகிய சகல அமைப்புகளும் அழிந்து போய்விடும்.**

மெழுகு உருகினால் எப்படி கரைந்து போகிறதோ, அப்படியே இந்த அமைப்புகளும் முழுமையாக அழியும்.

இந்த அக்கினியை குறித்து நம்முடைய ஆண்டவராம் இயேசுவும்
**"மகா உபத்திரவ காலம்"**
என்று குறிப்பிடுகிறார்.



**மத்தேயு 24:21,22**

**"ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை;..."**

ஆகவே, இந்த பொல்லாத அமைப்புகள் மேல் வரும் பெரிதான நியாயத்தீர்ப்பும், அழிவும் "நெருப்பு" என்று அடையாளமான மொழியில் சொல்லப்படுகிறது.

ஆனால், அநேகர் இந்த அழிவைக் கண்டு, தப்பித்து உயிருடனும் இருப்பார்கள் என்று நாம் கீழுள்ள வசனத்தை வாசித்து அறிந்துக் கொள்ளலாம்.

**சகரியா 14:16**

**"பின்பு, எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கும்,..."**

இந்த இரண்டாம் உலகத்தின் முடிவு மகிமையான மூன்றாம் உலகத்திற்கு வழிநடத்தும்.

**(2பேதுரு; 3:13) "....நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்."** வரக்கூடிய இந்த நீதியுள்ள ஆளுகையைப் பற்றி வெகு சிலருக்கே தெரிந்திருக்கிறது.



"C" என்ற எழுத்து இந்த யுகங்களின் வரைப்படத்தில் மூன்றாம் உலகத்தின் காலத்தைக் காட்டுகிறது.




இந்த உலகத்தைக் குறித்து நாம் கீழுள்ள வசனத்தில் வாசிக்கலாம்.

## 2 பேதுரு 3:13

**"அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்."**

இந்த வசனம் நீதி வாசமாயிருக்கும் வரக்கூடிய மூன்றாம் உலகத்தைப் பற்றி சொல்லுகிறது. இந்த வசனத்தில் **"புதிய"** வானம், **"புதிய"** பூமி என்று வாசிக்கிறோம். ஆம் இது முன்பு பார்த்தபடியே,

- **"புதிய" வானம் என்பது, பூமியின் மேல் கண்ணுக்குத் தெரியாத புதிய ஆவிக்குரிய அரசாட்சி.**
- **"புதிய" பூமி என்பது, பூமியின் மேல் கண்ணுக்குத் தெரிகிற புதிய மாம்சத்திற்குரிய அரசாட்சி.**

இந்த **ஆவிக்குரிய ஆளுகையும், மாம்சத்திற்குரிய ஆளுகையும்** நீதியுள்ளதாக இருக்கும். இதற்கு முன்பு இருந்த முதல் உலகத்திலும், இரண்டாம் உலகத்திலும், இப்படிப்பட்ட நீதி இருந்ததில்லை.

## இந்த மூன்றாம் உலகத்தின் ஆளுகை யாருடைய பொறுப்பில் இருக்கும்?

இதைக் குறித்து கீழுள்ள வசனத்தில் வாசிப்போம்.

**வெளிப்படுத்தல் 20:4,6**

**"....அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்."**

**"....இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக, ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்."**



ஆகவே, இயேசு கிறிஸ்து அவருடைய சரீர அங்கங்களாகிய சபையோடு சேர்ந்து இந்த பூமியை ஆயிரம் வருஷம் அரசாளுவார்.

இதன் மூலம் நம்முடைய நீண்ட நாள் ஜெபமும் நிறைவேறும்.

**மத்தேயு 6:10**

**"...உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக."**



இது, சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் சகல பாடுகளையும் அனுபவித்த சபை மக்களுக்கு கொடுத்த “வாக்குத்தத்தங்கள்” நிறைவேறக்கூடிய காலமாகவும் இருக்கும்.

**2 திமோத்தேயு 2:12**

**"அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்;...."**

ஆகவே, இந்த அரசாட்சியில் அவர்கள் கிறிஸ்துவோடு மூன்றாம் உலகத்தில் ஆயிர வருடங்கள் ஆளுகை செய்வார்கள். இதைப் பற்றிய பாடங்களை நாம் வரக்கூடிய வகுப்புகளில் பார்ப்போம்.

**இந்த மூன்றாம் உலகம், இரண்டாம் உலகம் முடியும் முன்னே ஆரம்பித்து விடுகிறது.**

**(இந்த காரியங்களைக் குறித்துக்கூட விவரமாக வரக்கூடிய பாடங்களில் பார்க்கலாம்)**

**“அக்கினியினால்”** இந்த இரண்டாம் உலகம் “அழிக்கப்படுவதை” பற்றி வாசித்தோம். **இந்த அழிவு மூன்றாம் உலகத்தின் ஆரம்பத்திலும்** நீடிக்கக்கூடியதாக இருக்கிறது. இது சொல்லர்த்தமான “அக்கினி” அல்ல. மாறாக இந்த உலகத்தின் அமைப்புகளின் முழுமையான அழிவை அடையாள மொழியில் நமக்கு குறிக்கிறதாக இருக்கிறது.

**1 கொரிந்தியர் 7:31**

**“....இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே.”**

இதை குறித்து கீழுள்ள வசனத்தில் வாசிப்போம்.

**யாக்கோபு 5:1-4**

**"ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய, கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது."**

யாக்கோபு அவர் நிரூபத்தில் குறிப்பிடும் பொழுது ஐசுவரியவான்களுக்கு வரும் பிரச்சனைகள், தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் வரும் போராட்டங்கள் போன்றவைகளைக் குறித்து “அக்கினி” என்று அடையாளமாக உரைக்கிறார்.

இது வெளிப்படுத்தின விசேஷத்தில் **“அர்மகெதோன்”** என்றும் அழைக்கப்படுகிறது. **(வெளிப்படுத்தல் 16:16)**

இது பூமி எங்கும் நடக்கும் என்பதை யோவேலின் புத்தகத்தில் வாசிக்கலாம். **(யோவேல் 3:14)** (அர்மகெதோனைப் பற்றி நாம் வரக்கூடிய பாடங்களில் பார்க்கலாம்.) மேலும், இந்த காலப்பகுதிகளில் உள்ள சூழ்நிலைகளைப் பற்றி நாம் எசேக்கியேலின் புத்தகத்தில் வாசிக்கலாம்.

**எசேக்கியேல் 7:19**

**".....கர்த்தருடைய சினத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை விடுவிக்கமாட்டாது; அவர்கள் அதினால் தங்கள் ஆத்துமாக்களைத் திருப்தியாக்குவதும் இல்லை தங்கள் வயிறுகளை நிரப்புவதும் இல்லை; அவர்கள் அக்கிரமமே அவர்களுக்கு இடறலாயிருந்தது."**

இந்தக் காலத்தை குறித்து பார்க்கும் போது மிகவும் அதிர்ச்சியாகவே இருக்கிறது.

**ஆம், அந்த சூழ்நிலையை சற்று யோசித்து பாருங்கள்.**



இதை குறித்து நம்முடைய ஆண்டவராம் இயேசு பேசியிருக்கிறார்.

**மத்தேயு 24:21**

**"....உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்."**

இந்தக் காலப்பகுதியை **“மிகுந்த உபத்திரவத்தின் காலம்”** என்கிறார். இருந்தபோதிலும், சிலர் உயிர்தப்பி பிழைப்பார்கள் என்று நாம் கீழுள்ள **மத்தேயு 24:22** -ஆம் வசனத்தில் வாசிக்கலாம்.

**“....தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்.”**

இந்த தீமையான “அமைப்புகள்” அழிக்கப்பட்டு, மனுக்குலம் தங்களை தேவனிடத்தில் தாழ்த்தி ஒப்புக்கொடுக்கும் பொழுது இந்த கடுமையான சம்பவங்கள் அனைத்தும் தேவனுடைய வல்லமையால் முடிவிற்கு கொண்டுவரப்படும். இந்த காரியங்கள் முடியும்பொழுது இன்னும் சிலர் இந்த உலகத்தில் உயிரோடு இருப்பார்கள் என்று (சகரியா 14:16) வாசிக்கிறோம்.

**இந்த சம்பவத்தின் ஒரு சிறிய மாதிரியை நாம் பதினெட்டாம் நூற்றாண்டில் (1760 ம் வருடம்) நடந்த பிரெஞ்சுப் புரட்சியில் காணலாம்.**



ஆம், அங்கு குறிப்பிட்ட நாட்டில் நடந்தது, உலகம் முழுவதும் நடக்க இருக்கிறது. இந்த சம்பவங்கள் நடந்து முடியும் பொழுது இரண்டாம் உலகம் ஒரு முடிவுக்கு வரும்.

பின்பு ஜனங்கள் காணும்படி தேவன் அவருடைய இராஜ்யத்தை அவருடைய சொந்த ஜனமாகிய இஸ்ரயேலர் மத்தியில் ஸ்தாபிப்பார். உலகத்தின் சகல நாடுகளும் அவர்களுடைய ஆட்சியை விரும்பி ஏற்றுக் கொள்ளுவார்கள்.

**சகரியா 8:22**

**"அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் வருவார்கள்."**




ஆம், வரக்கூடிய காலங்களில் தேவனுடைய "பூமிக்குரிய ராஜ்யம்" எருசலேமை மையமாக கொண்டு தொடங்கப்படும். இந்தக் காரியம் அநேக கிறிஸ்தவர்களுக்கு ஆச்சரியமாகவே இருக்கும். சகல நாடுகளும் இந்த ராஜ்யத்திற்கு உட்பட விரும்புவார்கள். ஆம் வேத வசனம் கூறுகிறபடி,

**மத்தேயு 8:11**

**"அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்."**

உயிர்த்தெழுந்த தேவனுடைய நீதிமான்கள் இந்த உலகத்தில் போதகர்களாகவும், அரசாளுகிறவர்களுமாக இருந்து இந்த பூமியை நீதியோடு ஆட்சி செய்வார்கள்.

## சங்கீதம் 45:16

**"உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்."**

இவர்கள் தேவனுக்கேற்ற விசுவாசிகளாகவும், பிதாக்களாகவும் இருந்தாலும்கூட, இவர்கள் இயேசுவுக்கு முன் வாழ்ந்ததினால் இவர்கள் சபை வகுப்பில் பங்கு பெற வாய்ப்பு அளிக்கப்படவில்லை. இவர்களுக்குரிய பரிசை பெற, அவர்கள் உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவிடமிருந்து ஜீவனைப்பெற வேண்டும். அவர்கள் அவருக்கு “குமாரராக” இருப்பார்கள்.

இன்றைக்கு அநேகர் ஆபிரகாம், தாவீது, மோசே அனைவரும் பரலோகத்தில் இருப்பதாக நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் பரலோகத்தில் இருந்து வந்த ஒருவரிடமிருந்து நாம் பெற்ற தகவலை இங்கு குறிப்பிட வேண்டும்.

## யோவான் 3:13

**"பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை."**

ஆம், நித்திரையில் இருக்கும் இந்த நீதிமான்கள் உயிர்த்தெழுப்பப்பட்டு, தேவனுடைய ராஜ்யத்தில் பிரபுக்களாக இருப்பார்கள்.



இந்த நீதிமான்கள் வரிசையில் ஆபேல் தொடங்கி ஸ்நானக யோவான் வரைக்கும் உள்ளவர்கள் ஆவர். இவர்களில் ஸ்நானக யோவான் பெந்தேகோஸ்தே நாளுக்கு முன்பு கடைசியாக மரித்தவர் ஆவார்.

அதற்கு பின்பு, நீதி வாசம் செய்யும் அந்த பூமியில் ஆதாமுக்குள் மரித்த அனைவரும் உயிர்த்தெழுவார்கள்.

**யோவான் 5:28**

**"இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்;.."**

**தானியேல் 12:2**

**"பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்.**

**இதுவே உலகத்தின் நியாயத்தீர்ப்பாகும்.**

**ஆம் அவர், ---**



## அப்போஸ்தலர் 17:31

**"மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்;..."**



இங்கு, இந்த நியாயத்தீர்ப்பின் வேலைக்காக நியமிக்கப்பட்டவர் நம்முடைய ஆண்டவராம் இயேசு ஆவார். அநேகர் கள்ள உபதேசங்களாலும், மூடநம்பிக்கையாலும், இந்த **“நியாயத்தீர்ப்பின் நாளைக்”** குறித்து மிகவும் பயம் மிகுந்தவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், நாம் வரக்கூடிய பாடங்களில் இந்த “நாள்” எவ்வளவு பெரிய சந்தோஷத்திற்குரிய நாள் என்று பார்க்கலாம்.

## சங்கீதம் 98:8,9

**"கர்த்தருக்கு முன்பாக ஆறுகள் கைகொட்டி, பர்வதங்கள் ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடக்கடவது. அவர் பூமியை நியாயந்தீர்க்கவருகிறார்; பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார்."**

உண்மையில், அடையாள மொழியில் இந்த நியாயத்தீர்ப்பின் நாள் ஒரு மகிழ்ச்சியின் நாளாக சொல்லப்பட்டு இருக்கிறது! இந்த அனைத்துக் காரியங்களும் மனுஷனுக்காக தேவன் வைத்திருக்கும் திட்டங்களே. ஏனெனில்,

## 1 தீமோத்தேயு 2:4

**"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்."**

இதே காரியத்தைக் குறித்துக் அப்போஸ்தலராகிய பேதுரு கூறும் பொழுது,

## 2 பேதுரு 3:9

**"தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்."**



**இந்த வசனத்திற்கு என்ன பொருள்?**

**மேலும், எல்லோரும் மனம் திரும்ப வேண்டும் என்பதன் அர்த்தம் என்ன?**

**எல்லாரும் மனந்திரும்புவார்களென்றால்,**

**எல்லோரும் பரலோகம் சென்று விடுவார்களா?**
**அநேகர் இந்த வசனத்தை தவறாக புரிந்துக் கொள்ளுகிறார்கள்.**

அனைவரும் இரட்சிக்கப்படவும் அல்லது எல்லாரும் மனந்திரும்பவேண்டும் என்றால் அனைவரும் பரலோகம் செல்லுவதாக நினைத்துக் கொள்ளுகிறார்கள்.



நாம் முன்பு பார்த்தப் பாடத்தில் சொல்லியது போல **"இரசிப்பு"** என்றால், **மரணத் தீர்ப்பில் இருந்து ஜீவனை பெறக்கூடிய வழியாகும்.** இந்த ஜீவன் நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் ஈடுபலியின் மூலம் நமக்கு கிடைத்திருக்கிறது. **(1 கொரிந்தியர் 15:21,22)**

ஆகவே, அனைவரும் **"இரட்சிப்பு அடைவது"** என்றால் அனைவரும் மரணத்திலிருந்து விடுதலைப் பெற்று, ஜீவனை அடைவதைக் குறிக்கும்.

அதற்குப் பின்பு அனைவரும் "சத்தியத்தை அறியும் அறிவை" அடைய வேண்டும் என்றால், அவர்கள் பாவ நிலைமையிலிருந்து தேவ வசனத்தினால் சுத்திகரிக்கப்பட்டு. பாவத்திலிருந்து விடுதலை பெறவேண்டும்.

## யோவான் 17:17

**"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்."**

**நாம் சத்தியத்தின் மூலம் சுத்திகரிப்பு அடைவது என்றால் நாம் அறிந்த சத்தியத்தை உணர்ந்து நம்முடைய பாவ வழிகளிலிருந்து முழுமையாக விடுதலை அடைவதாகும்.**

அந்த சூழ்நிலையில் உலக மக்கள் சத்தியத்தை பெறுவதற்கான திட்டங்களை தேவன் வைத்திருக்கிறார்.

**ஆபகூக் 2:14**

**"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்."**

ஆகவே, அனைவரும் சத்தியத்தை அறிகிற தெளிவான அறிவைப் பெறுவதின் மூலம், பாவ நிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்வார்கள்.

**இரட்சிப்பின் திட்டத்தை நாம் இவ்வாறு வரைபடமாக காட்டலாம்.**



**"அனைவரும் சத்தியத்தை அறிய வேண்டும்"** என்று தேவன் விரும்பினாலும், சிலர் சத்தியத்தின் மேல் விருப்பம் இல்லாமல் அதை கடைப்பிடிக்க மனதில்லாதவர்களாக இருப்பார்கள்.

ஏசாயா 26:10

**"துன்மார்க்கனுக்குத் தயை செய்தாலும் நீதியைக் கற்றுக்கொள்ளான்; நீதியுள்ள தேசத்திலும் அவன் அநியாயஞ்செய்து கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதேபோகிறான்."**




இவர்கள் மனபூர்வமாக தேவனை எதிர்த்து, அவருடைய நீதிக்கும், நியாயத்திற்கும் விரோதமாக பாவம் செய்கிறவர்களாக இருப்பார்கள். ஆகவே, அவர்கள் இரண்டாம் மரணம் என்ற முடிவான தீர்ப்பை பெறுவார்கள்.

வெளிப்படுத்தல் 21:8

**".....அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்..."**

இந்த "அக்கினிக் கடலை" குறித்தும், "இரண்டாம் மரணத்தை" குறித்தும், வரக்கூடிய வகுப்புகளில் காணலாம்.

இப்படியாக ஆயிரவருட அரசாட்சியின் முடிவுக்கு வந்திருக்கிறோம். இந்த யுகத்தின் முடிவில் பூமியின் நிலையை குறித்து கீழுள்ள வசனத்தில் வாசிப்போம்.

## வெளிப்படுத்தல் 21:4

**"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது."**

மூன்றாம் உலகத்தில் ஆயிர வருடங்கள் முடிந்த பின்பு **"யுகா யுகங்கள்"** ஆரம்பிக்கும்.

**நாம் பார்த்த முதல் உலகம், இரண்டாம் உலகத்தைப் போல் இந்த யுகம் இல்லாமல், யுகா யுகம் ஒரு முடிவில்லாத யுகமாக இருக்கும்.**

**...ஆமென்...**

# THE FLOOD




(In the 600th year of Noah's life (Gen. 7:11), he was 599 years old.)

(In his 601st year, thefirst month and first day (Gen. 8:13), he was not 601years old but just beginning his 601st year; consequentlyup to that date he had lived 600 full years)

For Private Circulation Only

NOT FOR SALE




For more Subjects contact: MESSENGERS OF CHRIST  E-mail: thekingdom1_6@yahoo.com